THIRU K. VINAYAKAM : Is any fee charged from the Librarians who come for this refresher course ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தேவையான படிகள் கொடுக்கப் படுகின்றன.

DR. H. V. HANDE : The Minister said that the course has not yet commenced. What is the programme that the Government have for this course ? Do they intend to have the course throughout the year or during a part of the year ? Will the Minister give us some more details about the intended course ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்த Refresher course மிகக்குறுகிய காலத்தில், இரண்டு வாரத்தில் நடத்தப்படுகிறது. இதனால் வேலைப்பளு ஏற்பட்டு விடாது. பயிற்சி பெறுபவர்களுக்கு என்னென்ன படிகள் கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் கொடுக்கிறோம்.

திரு. அ. மாரிமுத்து : தலைவரவர்களே, கிளை நூலகங்களில் புத்தகங்களில் மேல் உள்ள அட்டைகள் இல்லாமல் கிழிந்துபோய் படிப்பதற்கு வசதியற்ற நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு ஆவன செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேல் அட்டையிலே படிக்க வேண்டியது எதுவும் இருக்காது. புத்தகத்தில் உள்ளேதான் இருக்கும். அட்டைகள் கிழிந்துபோனால் பைண்ட் செய்து அடுக்கி வைக்க இப்போது வசதிகள் இருக்கின்றன.

காஞ்சிபுரத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி

*420—வினா : திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரத்தில் உள்ள பாலிமேடு என்கிற பல்லமேட்டில் இந்த ஆண்டில் (1968) தொல்பொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There are a number of areas in our State where the Archaeological Survey Department has not gone. For example, a survey party went to Hosur taluk in Dharmapuri district in 1911. But, for the last forty-five years, the party has not gone there. I have come across nearly one hundred stone inscriptions. Dharmapuri district stands in a strategic position between Mysore tableland and the plains below. A reading of the stone inscriptions may shed light on a number of facts relating to South Indian History. Will the Hon. Minister kindly give instructions to the Archaeological Department to visit these places early ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தர்மபுரி மாவட்டத்தைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை. ஆர்க்கியலாஜிக்கல் இலாகா ஒவ்வொரு மாவட்டமாக குறிப்பிட்ட பகுதிகளை எடுத்துக்கொண்டு இப்படிப்பட்ட புத்தகங்கள்கூடத் தயார் செய்கிறார்கள். நேற்றுக் கூட என்னிடத்தில் ஒரு புத்தகம் கொடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே சோழர்கள

ஆட்சிக் காலத்திலே கிடைத்த கல்வெட்டுக்களை எல்லாம் குறித்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் தர்மபுரி மாவட்டத்தைப்பற்றிக் குறிப்புகள் அனுப்பினால் புத்தகமாகத் தயாரிக்கலாம்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the famous Pallavas ruled with Conjeevaram as their capital and whereas the plaee under referency, Palimedu near Conjeevaram would contain some important things from the point of view of archacology, will the Government at least instruct the Archaeological Department to undertake the survey of that place ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்கூட இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பல்லவமேடு என்று ஒன்று பெரிய மேடாக இருக்கிறது. அதிலே ஏதாவது சரித்திர ஆதாரம் கிடைக்கும் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினருடைய கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

குழந்தைகள் மனவியல் பள்ளிகள்

* 421 வினா :—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

குழந்தைகள் மனவியல் நலப் பள்ளி மாவட்டந்தோறும் அமைப்பது பற்றித் திட்டம் ஏதாவது சர்க்காரின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Shortage of cycle tyres and tubes

*422—*Q*.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether shortage of the cycle tyres and tubes has been reported in the market in the City of Madras recently ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சைக்கிள் டயர், ட்யூப்புகள் தட்டுப்பாடு இருப்பதாக அறிவிக்கப்படவில்லை. விசாரித்ததில் சென்னை மாநகரக் கடைகளில் அவை தாராளமாக விற்பனைக்குக் கிடைப்பதாகத் தெரிகிறது.

திரு. ப. மகாதேவன் : அவைத் தலைவர் அவர்களே, சைக்கிள் ட்யூப் டயர்ஸ் ஷார்ட்டேஜ் இருப்பது தெரிந்திருக்கிற காரணத்தினாலே குமரி மாவட்டத்திலே இரப்பர் பிளான்டேஷன்ஸ் நிறைய இருக்கின்றன அங்கே இரப்பர் நிறையக் கிடைப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறிப்பிட்ட, இந்த டன்லப் கம்பெனி டயருக்குத்தான் அதிகம் கிராக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். டன்லப் கம்பெனியிலே அவர்களுடைய தொழிற்சாலையை இன்னும் அதிகரித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டம் வைத்திருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். புதிதாக இப்படிப்பட்ட தொழிற்சாலை திறக்க யாராவது முன்வந்தால் அரசாங்கம் உதவி செய்ய முன்வரும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : பல இலட்சக்கணக்கானவர்கள் உபயோகிக்கும் இந்த மிதி வண்டிகளின் டயர், ட்யூப்கள் அடிக்கடி பஞ்சராகி விடுகின்றன. கொஞ்சம் பருமனாக உள்ளவர்கள் ஏறினாலே பஞ்சராகி விடுகின்றன. அவைகளினுடைய தரம் முன்போல் இல்லை. தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?